**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

Mcop 350/2023

**ம.சா1 பச்சம்மாள்**

| | |
|---|---|
| Name | : பச்சம்மாள் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 29.01.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த மனுவில் மனுதாரர். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

1. 08.07.2023 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 1.

2. 11.07.2023 ம் தேதியிட்ட என்னுடைய டிஸ்சார்ஜ் சம்மரி ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 2

3. டி.என்.92.ஏ.4662 என்ற வாகனத்தின் ஆர் சி புத்தகம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 3

4. மேற்படி வாகனத்தின் காப்பீடு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 4

5. 1 ம் எதிர்மனுதாரரின் ஒட்டுனர் உரிமம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 5

6. என்னுடைய ஆதார் அடையாள அட்டை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 6

7. என்னுடைய வங்கி கணக்கு புத்தகம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 7

8. 11.07.2023 தேதியிட்ட ரூ.97,891/−க்குரிய மருத்துவ ரசீது அசல் ம.சா.ஆ 8

9. 11.07.2023 தேதியிட்ட ரூ.2,775/−க்குரிய மருத்துவ ரசீது அசல் ம.சா.ஆ 9

10. ரூ.1365/−மருத்துவ ரசீது மற்றும் ரூ.1500/−க்கான வண்டி வாடகை ரசீது அசல் ம.சா.ஆ 10

11. 16.10.2023 ம் தேதியிட்ட ரூ.12005/−க்குரிய மருத்துவ ரசீது அசல் ம.சா.ஆ 11

12. 16.10.2023 ம் தேதியிட்ட என்னுடைய டிஸ்சார்ஜ் சம்மரி அசல் ம.சா.ஆ 12.

13. 16.10.2023 ம் தேதியிட்ட ரூ.1500/−க்குரிய வாடகை ரசீது அசல் ம.சா.ஆ 13

14. 23.10.2023 ம் தேதியிட்டரூ.1830/− மற்றும் 1500/−க்குரிய வண்டி வாடகை ரசீது அசல் ம.சா.ஆ 14

15. பல்வேறு தேதியிட்ட ரூ.9765/−க்குரிய ரசீதுகள் எண்ணம் அசல் ம.சா.ஆ 15 வரிசைகள்

16. 3.3.2025 ம் தேதியிட்ட ரூ.2735/−க்குரிய ரசீது அசல் ம.சா.ஆ 16

17. 3.3.2025 ம் தேதியிட்ட ரூ.41,835/−க்குரிய ரசீது அசல் ம.சா.ஆ 17

18. 3.3.2025 ம் தேதியிட்ட டிஸ்சார்ஜ் சம்மரி அசல் ம.சா.ஆ 18

19. 09.03.2025 ம் தேதியிட்ட ரூ.1717/−ரசீது மற்றும் ரூ.1500/−க்கான வண்டி வாடகை ரசீது அசல் ம.சா.ஆ 19

20. பல்வேறு தேதியிட்ட ரூ.20,103/−க்குரிய மருத்துவ பில்கள் அசல் ம.சா.ஆ 20.

21. பல்வேறு தேதியிட்ட ரூ.8859/−க்குரிய மருத்துவ பில்கள் ரசீதுகள் எண்ணம் 8 ம.சா.ஆ 21 வரிசைகள்.

22. நான் எஸ்,எம்.ஆர் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்ததற்கான அடையாள அட்டை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 22.

(3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ 19 முதல் 21 வரையுள்ள பில்களும், கார் வாடகை ரசீதுகளும் ஏற்புடையது அல்ல என ஆட்சேபனை செய்யப்பட்டது). மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை

என்னுடைய வருமானம் சம்பந்தமான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஒட்டிய ஒட்டுனருக்கு முறையான ஒட்டுனர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். அந்த வாகனம் 3 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு

செய்யப்பட்டிருந்தது என்றால்சரிதான். எனக்கு இழப்பீட்டை காப்பீட்டு நிறுவனம் மட்டும் தான் வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

3 ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து நடந்து 2 நாட்கள் கழித்து காவல்துறையில் தகவல் கொடுத்தேன் என்றால் சரிதான். அதற்கு தனிபட்ட காரணம் இல்லை. விபத்து என் கவனக்குறைவால் ஏற்பட்டதால் நான் உடனடியாக காவல்துறையில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. வாகனமானது எனக்கு பின்னால் வந்து மோதியது என்றால் சரிதான். பின்னால் வந்த வாகனம் எவ்வாறு வந்தது என எனக்கு தெரியாது என்றால் நான் திரும்பி பார்த்து நடந்து சென்றேன். அந்த நபர் மது அருந்திவிட்டு வாகனத்தை ஒட்டி வந்தார். மது அருந்திவிட்டு வாகனத்தை ஒட்டினார் என நான் கொடுத்த புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். நான் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுதபடிக்க தெரியுமா என்றால் தெரியாது. விபத்து எந்த தேதியில் நடைபெற்றது என்றால் தெரியவில்லை. வருமான இழப்பை நான் விபத்து நடந்த தேதிக்கு முன்பிருந்து கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது சொந்த செலவினங்களை கழிக்காமல் ரூ.20 ஆயிரம் மாதவருமானம் என தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. செங்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் எனக்கு முதல் சிகிச்சை கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அங்கிருந்து தென்காசி அரசு மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்கு அனுப்பினார்கள் என்றால்சரிதான். நான் தென்காசி அரசு மருத்துவமனை செல்லாமல் ஆவுடையானூர் தனியார் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் எனக்கு முடியாமல் போனதால் சென்றேன். வாடகை ரசீதுகளில் முறையான கிலோமீட்டர் கணக்குகளும், ஒட்டுனர் கையெழுத்து இல்லாமல் இருப்பதால் அந்த ஆவணங்கள் ஏற்றுகொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல. கீழப்புலியரில் இருந்து ஆவுடையானூர் 25 கி.மீட்டர்இருக்குமா என்றால் தெரியவில்லை. எனக்கு தெரிந்த கார் ஒட்டுனரை வைத்து ரசீதுகளை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. ரூ.20 ஆயிரம் மதிப்புள்ள நகைகளை காணவில்லை என முதல் தகவல் அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. வலியுள்ளது. நான் முன்பு போல் வேலைக்கு செல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள

இழப்பீடு தொகை அதிகம் என்றும், விபத்து தேதியில் இருந்து எனக்கு வட்டி கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் அவரது வாகனத்தை சரியாக ஒட்டினார் என்றும், நான் தான் குறுக்கே சென்று விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.